மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 5, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

5—

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

***3092—திரு. எம்.சி. சண்முகையா:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஒட்டப்பிடாரத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10–25

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) ஒட்டப்பிடாரம் தொகுதி, ஒட்டப்பிடாரம் அமைந்துள்ள தூத்துக்குடி மாவட்டத்தில் தற்போது 3 அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 9 அரசு உதவிபெறும் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், 14 சுயநிதி கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளும், இதைத் தவிர, 12 பொறியியல் கல்லூரிகளும் மற்றும் 10 பலவகை தொழில்நுட்பக் கல்லூரிகளும் இயங்கி வருகின்றன. இக்கல்லூரிகள் அத்தொகுதியில் உள்ள மாணவ, மாணவியரின் உயர் கல்வித் தேவையை நிறைவு செய்து வருவதால், ஒட்டப்பிடாரத்தில் கலை மற்றும் அறிவியல் கல்லூரி துவக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள்.*

திரு. எம்.சி. சண்முகையா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக மக்களின் பாதுகாவலரும், தமிழ் மொழியின் பாதுகாவலரும், கழகத்தின் தலைவருமான மாண்புமிகு முதலமைச்சர் தளபதியார் அவர்களை வணங்குகிறேன்.*

2022 ஜனவரி 6]

ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, மிகவும் பின்தங்கிய தொகுதியாகும். இந்தத் தொகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியே இல்லை. இங்குள்ள மாணவ, மாணவியர் கல்லூரிக்குச் செல்ல வேண்டுமென்றால், சுமார் 50 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலிக்குச் சென்று வர வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்தத் தொகுதி மக்களின் நலன் கருதி, ஒட்டப்பிடாரம் தொகுதியிலுள்ள புளியம்பட்டி அல்லது சவாலாப்பேரி அல்லது தெய்வசெயல்புரத்தை மையமாக வைத்து, அங்கு ஓர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்துத் தர வேண்டுமென்று மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களிடம் பணிவோடு வேண்டி கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாவட்டத்தில் உள்ள அரசுக் கல்லூரிகளில் மொத்தமுள்ள இடங்கள் 3,329. அதிலே 2,030 இடங்கள்* fill up *ஆகாமல் காலியாக இருக்கின்றன. அதேபோன்று அரசு உதவிபெறும் கல்லூரிகளில் 22,221 பேரை* admit *செய்யலாம். அதிலே 5,053 இடங்கள் காலியாக இருக்கின்றன. சுயநிதிக் கல்லூரிகளில் 10,308 இடங்கள் இருக்கின்றன. அங்கேயும் 4,719 இடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே, அந்த மாவட்டத்தைப் பொறுத்தவரையில், 11,802 இடங்கள் காலியாக இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, அந்தப் பகுதியில் அரசுக் கல்லூரிகள் இல்லை; 50 கிலோ மீட்டர் தொலைவில்தான் கல்லூரிகள் இருக்கின்றன. அரசுக் கல்லூரிகள் இல்லையென்றாலும், அரசு உதவிபெறும் கல்லூரிகளும், தனியார் கல்லூரிகளும் இருக்கின்றன. ஆகவே, மாணவ, மாணவியர் அவற்றைப் பயன்படுத்திக்கொண்டு உயர் கல்வி கற்க வேண்டும். நிதிநிலைமை சரியாகும்பட்சத்தில், ஒட்டப்பிடாரம் தொகுதியில் அரசுக் கல்லூரி அமைப்பதைப் பற்றி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி அதற்கான முடிவுகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.சி. சண்முகையா அவர்கள்.*

திரு. எம்.சி. சண்முகையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதியில் ஒரேயொரு தனியார் கல்லூரி மட்டும்தான் இருக்கிறது. நான் சொல்லும் பகுதியை மையமாகக் கொண்டு, அங்கு கல்லூரி அமைத்துக் கொடுக்க வேண்டும். மிகவும் வறுமைக் கோட்டிற்குக்கீழ் வாழ்ந்து வருகின்ற கல்லூரி மாணவர்கள் அதிக தூரம் சென்று படிக்க இயலாத காரணத்தினால், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கண்ட இடத்தில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியை அமைத்துத் தருமாறு பணிவோடு வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அறிந்துதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசுப் பள்ளிகளிலே படிக்கிற மாணவர்களுக்கு 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டை, தனியார் கல்லூரிகளாக இருந்தாலும், அரசுக் கல்லூரிகளாக இருந்தாலும் கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருப்பதோடு மட்டுமல்லாமல், அவர்களுக்கான செலவையும், அதாவது fees கட்டணத்திலிருந்து, விடுதிக் கட்டணத்திலிருந்து அனைத்துக் கட்டணங்களையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்று அறிவித்திருப்பது மிகப் பெரிய வரலாற்றுச் சிறப்புமிக்க ஒன்றாகும். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, 50 கிலோ மீட்டர், 69 கிலோ மீட்டர் தொலைவில்தான் 3 கல்லூரிகளும் இருக்கின்றன. தனியார் கல்லூரிகளிலும் அரசுப் பள்ளி மாணவர்கள் சேர்ந்து படிக்க வேண்டுமென்பதற்காகத்தான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அரசுப் பள்ளி மாணவர்களுக்காக 7.5 சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்கியிருப்பது பெரிதல்ல; அவர்கள் தங்கிப் படிப்பதற்கான விடுதிக் கட்டணத்திலிருந்து, அவர்கள் பணம் கட்டிப் படிப்பதற்கான அனைத்துச் செலவுகளையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்று அறிவித்திருக்கிற முதல் முதலமைச்சர் இந்தியாவிலேயே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்களை நான் அன்போடு

2022 ஜனவரி 6]

கேட்டுக்கொள்வது, அங்கே ஒரு தனியார் கல்லூரி இருக்கிறதென்று சொல்லியிருக்கிறீர்கள். அவர்களை அந்தக் கல்லூரியில் சேர்ந்து படிக்கச் சொல்லுங்கள். காலம் வருகிறபொழுது, நிச்சயமாக—எல்லா உறுப்பினர்களும் தங்கள் தொகுதியில் கல்லூரி வேண்டுமென்று கேள்வி கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு சபாநாயகர் அவர்களும் அவருடைய தொகுதியில் ஒரு கல்லூரி வேண்டுமென்று கேட்டார்கள். அவருடைய தொகுதிக்கும் ஒரு கல்லூரியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். ஆகவே. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆனால், கல்லூரி இன்னும் வரப்பெறவில்லை.*

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: *அடுத்த ஆண்டிலிருந்து அவையெல்லாம் துவக்கப்படுமென்று சொல்லியிருக்கிறோம். அடுத்த கல்வியாண்டிலிருந்து 10 கல்லூரிகளும் துவக்கப்படும். அதில் எந்தவிதமான மாறுபட்ட கருத்தும் இல்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர்களெல்லாம், படிப்படியாக உயர் கல்வியை வளர்ப்பதற்காக நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்து வருகின்ற முயற்சிகளுக்கு ஆதரவளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ.பி. செந்தில்குமார் அவர்கள்.*

முற்பகல் 10—30

திரு. ஐ.பி. செந்தில்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், பழனி சட்டமன்றத் தொகுதி, கொடைக்கானல் நகரத்தில் பெண்கள் பயில்வதற்கு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரி இருக்கிறது. மலைப் பகுதியில் இருக்கக்கூடிய மிகவும் பின்தங்கிய ஏழையெளியவர்கள், பழங்குடியின மாணவர்கள் பயில்வதற்கு ஆண்கள் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை கொடைக்கானல் நகரத்தில் அமைக்க மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்வர வேண்டுமென்று என் தொகுதி மக்களின் சார்பில் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.*

TRUTH ALONE TRIUMPHS வாய்மையே வெல்லும்

மாண்புமிகு முனைவர் க. பொன்முடி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் அந்தப் பகுதியைச் சார்ந்தவர்தான். அவரும் ஒரு கல்லூரியை கூட்டுறவுத் துறையின் மூலமாக துவக்குவதற்கு அனுமதி அளித்திருக்கிறார்கள். அதை அங்குதான் துவக்கப் போகிறார். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் வேண்டுகோளை ஏற்று அங்கு கல்லூரியை உருவாக்கித் தருமாறு நான் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். காலம் வருகின்றபோது நிச்சயமாக அரசு அதற்கான பரிசீலனைகளைச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

6—

சாலை விரிவாக்கம்

***7038—திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செங்கோடு தொகுதி, திருச்செங்கோடு ஒன்றியத்திற்குட்பட்ட சேலம் கோழிக்கால்நத்தம்–வடுகப்பட்டி–வைகுந்தம் சாலையை விரிவாக்கம் செய்திட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஜனநாயகத்தின் நான்கு தூண்களில் ஒன்று சட்டமன்றம். சட்டமன்றத்தில் உள்ள அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அத்துணை பேரும் தங்களது தொகுதி மக்களுக்காக, நாட்டு மக்களுக்காகப் பணியாற்றுகின்றோம். ஆக, அப்படிப்பட்ட நிகழ்வுகளை இன்றைக்கு உலகமே அறிகின்ற அளவுக்கு, நேரடி ஒளிபரப்புமூலம் நாட்டிற்கு பறைசாற்றியிருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாகவும், அமைச்சர் பெருமக்களின் சார்பாகவும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.